அலையாத்திக் காடுகளை வளர்ப்போம் அந்தமானை அழிவில் இருந்து காப்போம்

# அந்தமான் குரல்

தீவுகளின் துணிவான ஒரே தமிழ் நாளிதழ்

ANDAMAN KURRAL - TAMIL DAILY

மழை நீர்... உயிர் நீர்... மரம் வளர்ப்போம்! வளம் பெறுவோம்!!

பதிவுஎண் RNI: 30901/76 தி.ஆ.2056 ஆனி, 14 திங்கட்கிழமை 29 ஜுன், 2026 | பக்கம் : 6 | விலை: ரூ.2.00 | குரல்—52 | ஓசை 120


## கடல் முதல் வானம் வரை இந்தியா பாதுகாப்பாக மாறி வருகிறது - மனதின் குரலில் பிரதமர் மோடி பெருமிதம்



புதுடெல்லி: கடல் முதல் வானம் வரை இந்தியா அதிக அளவில் பாதுகாப்பாகவும், தற்சார்பு உடையதாகவும் ஆகி வருகிறது என்று மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மனதின் குரல் வானொலி நிகழ்ச்சியின் 135—வது அத்தியாயத்தில் பிரதமர் நரேந்திர மோடி ஆற்றிய உரையின் முழு தொகுப்பு: மனதின் குரலில் மீண்டும் ஒருமுறை உங்களோடு இணைவது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. 2026ஆம் ஆண்டின் முதல் பாதி, நிறைவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. கடந்த இந்த 6 மாதங்களில் நாம் மனதின் குரலிலே, நாட்டுமக்களின் அநேக சாதனைகள் குறித்து விவாதங்களில் ஈடுபட்டிருக்கிறோம். ஜூன் மாதத்தில் கூட தேசத்தில் சில சாதனைகள் அரங்கேறியிருக்கின்றன. இவை நாட்டுமக்களை பெருமிதத்தில் ஆழ்த்தியிருக்கின்றன.

இந்த வெற்றிகள் தேசத்தின் பாதுகாப்பு மற்றும் தற்சார்போடு தொடர்புடையவை. தற்போது தான் கோல்காத்தாவிலே, கடற்படையோடு தொடர்புடைய ஒரு நிகழ்ச்சியில் பங்குகொள்ளும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது. அங்கே ஐஎன்எஸ் துனாகிரி, ஐஎன்எஸ் சன்ஷோதக் மற்றும் ஐஎன்எஸ் அக்ரய் ஆகிய போர்க்கப்பல்கள் கடற்படையில் இணைக்கப்பட்டன. இந்தக் கப்பல்களின் வடிவமைப்பும், தயாரிப்பும், அனைத்துமே நம் நாட்டிலேயே ஆனவை.

ஜூன் மாதத்திலே தான் விமானத்துறையிலேயும் கூட, தேசம் பெரிய வெற்றியை ஈட்டியிருக்கிறது. சி—295 என்ற இந்த விமானம் முழுவதுமாக இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டது. மேலும், இந்த சி—295 விமானம் தனது முதல் வான் பயணத்தை நிறைவு செய்திருக்கிறது. இப்படி 40 விமானங்கள் பாரதத்திலேயே தயாரிக்கப்பட்டு

(தொடர்ச்சி... பக்.2)

## ராமர் கோயில் நன்கொடை திருட்டு வெட்கக்கேடான சம்பவம்; பிரியங்கா காந்தி விமர்சனம்

வயநாடு: ராமர் கோயிலுக்காகத் திரட்டப்பட்ட நன்கொடை திருடப்பட்டதாக கூறப்படுவது மிகவும் துயரமானது, வெட்கக்கேடானது என்று காங்கிரஸ் எம்.பி.பிரியங்கா காந்தி கூறினார்.

கேரள மாநிலம் வயநாடு எம்.பி. பிரியங்கா கடந்த வியாழக்கிழமை முதல் தொகுதியில் பயணம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் கூட்டங்களில் பங்கேற்று வருகிறார். அவர் நேற்று வயநாடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பங்கேற்ற பிறகு செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அயோத்தி ராமர் கோயிலுக்கு நாடு முழுவதிலும் இருந்து நம்பிக்கையும் பற்றும் கொண்டவர்கள் நன்கொடை வழங்கியுள்ளனர். ஆனால் அவை தற்போது திருடப்பட்டதாக தெரிகிறது. இது மிகவும் துயரமானது மற்றும் வெட்கக்கேடானது என்று நான் கருதுகிறேன்.

என்ன நடந்தது, எப்படி நடந்தது, அது ஏன் நடந்தது என்பது குறித்து அரசு விசாரிக்க வேண்டும். மேலும் அந்தப் பணத்தை சேகரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் பொறுப்பானவர்களும் இந்த முறைகேட்டுக்குப் பொறுப்பேற்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.






## அயோத்தி ராமர் கோயில் நிதி முறைகேட்டில் கைதானவர் ரூ.40 லட்சத்துக்கு வீடு வாங்கியது அம்பலம்

அயோத்தி: அயோத்தி ராமர் கோயில் நன்கொடை முறைகேட்டில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் ரூ.40 லட்சத்துக்கு வீடு வாங்கியுள்ளது அம்பலமாகியுள்ளது. உத்தர பிரதேசத்திலுள்ள அயோத்தி ராமர் கோயில் (ராம ஜென்ம பூமி தீர்த்த க்ஷேத்ரா) அறக்கட்டளைக்குப் பக்தர்கள் அளித்த காணிக்கையில் ரூ.7 கோடிக்கும் அதிகமான பணத்தை அங்கு பணிபுரிந்த ஊழியர்கள் கையாடல் செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்நிலையில் அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் சம்பத் ராய் மற்றும் அறங்காவலர் அனில் மிஸ்ரா ஆகியோர் தங்களது பதவிகளை அண்மையில் ராஜினாமா செய்தனர். கோயிலுக்கு வந்த நன்கொடை நிதியில் முறைகேடு நடந்ததாக எழுந்த புகாரைத் தொடர்ந்து, குற்றத்துக்கு தார்மீகப் பொறுப்பேற்று இந்த ராஜினாமாவை அளித்துள்ளனர். இதுதொடர்பாக கோயிலில் பணத்தை எண்ணும் பணியில் ஈடுபட்ட ஊழியர்கள் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அனுகல்ப் மிஸ்ராவின் அத்தை நேஹா மிஸ்ரா கூறியதாவது: அனுகல்ப் மிஸ்ரா, ராமர் கோயில் அறக்கட்டளையில் வேலைக்குச் சேருவதற்கு முன்பாக அவர்களது பொருளாதார நிலைமை மோசமாக இருந்தது. ஆனால், சில ஆண்டுகளில் அவரது வாழ்க்கை முறையே மாறிவிட்டது. அயோத்தியில் அவர் வீடு வாங்கினார். மேலும், ஒரு பெரிய வீட்டையும் அவர் தற்போது கட்டி வருகிறார். திடீரென இவ்வளவு பணம் வந்து எப்படி? அதைத்தான் நான் கேட்கிறேன். தீவிர விசாரணையின் மூலம் இந்த உண்மைகள் அனைத்தும் வெளியே வரவேண்டும். இவ்வாறு நேஹா கூறினார்.







# தலையங்கம்

அந்தமான் குரல்
குரல்—52 ஓசை 120
தி.ஆ.2056 ஆனி 14 திங்கள் 29 சூன் 2026

## நிலவுரிமையைப் பெற பெண்கள் தயாராகவில்லை! - ஆய்வாளர் நித்யா ராவ்

பிரிட்டனின் கிழக்கு ஆங்கிலியா பல்கலைக்கழகத்தில் பாலின — மேம்பாட்டுத் துறையின் பேராசிரியராகப் பணிபுரிந்துவரும் நித்யா ராவ், 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவிலும் ஆப்ரிக்க நாடுகளிலும் பாலினச் சமத்துவம், கல்வி, வேலைவாய்ப்பு சார்ந்த ஆய்வுகளில் ஈடுபட்டவர்.

'Quest for Identity'> 'Good Women Do Not Inherit Land' உள்ளிட்ட புத்தகங்களையும் எழுதியுள்ளார். நித்யா ராவின் ஆராய்ச்சிகள், சமூகத்தில் பெண்களின் பங்களிப்பை வலுப்படுத்துவதிலும் உரிமைகளை மேம்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அவருடனான பேட்டி:

இந்தியாவில் காலநிலை மாற்றம் பாலினரீதியாக ஏற்படுத்தியுள்ள தாக்கம் என்ன? ஓர் ஆராய்ச்சியாளராக இம்மாற்றங்களை எப்படிப் பார்க்கிறீர்கள்? — காலநிலை மாற்றத்தினால், வெப்பம், மழைப்பொழிவு, நீரோட்டங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால், வட இந்தியா — கிழக்கு இந்தியாவின் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த ஆண்கள் விவசாயத்தை விட்டு வேறு வேலை தேடித் தென்னிந்தியாவுக்கும், வெளிநாடுகளுக்கும் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

ஆண்கள் இல்லாத சூழலில், விவசாயம், வீட்டுப் பராமரிப்பு வேலைகளில் பெண்களே ஈடுபடுகிறார்கள். இதனால் பெண்களின் பணிச்சுமை அதிகரிக்கிறது; அதேநேரத்தில், குடும்பத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கும் நிலைக்குப் பெண்கள் வந்துள்ளனர். எனினும், வேலை ஆட்களை நியமிப்பது, வளங்களை நிர்வகிப்பது போன்ற நிலைகளில் பெண்கள் இல்லை.

சமீபத்தில், இந்திய மாநிலங்களில் ஆய்வு ஒன்றை நடத்தினோம். அதில் உத்தராகண்ட் போன்ற மாநிலங்களில் ஆண்கள் இல்லாத சூழலில், வயதான பெண்கள் குடும்பத்தில் முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தனர்; இளம் பெண்களோ பணிச் சுமையுடனும், நிலம் போன்ற வளங்களில் உரிமையில்லாத நிலையிலும் இருப்பது தெரியவந்தது.

காலநிலை மாற்றம் பாலினச் சமத்துவமின்மையைத் தீவிரப்படுத்துகிறதா? — காலநிலை மாற்றத்தினால் ஆண்கள், வேலையிழப்பை எதிர்கொள்கின்றனர். ஆண்களால் போதுமான அளவு வருமானம் ஈட்ட முடியாத நிலையில் குடும்பத்தின் வறுமையைப் போக்கப் பெண்கள் வேலைக்குச் செல்கிறார்கள். இது, பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரிப்பதற்குக் காரணமாகிறது.

கணிக்க முடியாத மழை அளவு, வறட்சியினால் மகாராஷ்டிரத்தில் கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் சென்றால்தான் குடும்பத்தை நடத்த முடியும் என்கிற நெருக்கடி நிலவுகிறது; இதனால் அங்கு இளம் வயதுத் திருமணங்கள் அதிகரித்து உள்ளன; பெண்களின் கல்வியும் பாதிக்கப்படுகிறது. இவ்வாறு, காலநிலை மாற்றம் பெண்களுக்கான வாய்ப்புகளைக் குறைப்பதுடன், பாலினச் சமத்துவமின்மையையும் தீவிரப்படுத்துகிறது.

உணவு உற்பத்தி — ஊட்டச்சத்துப் பாதுகாப்பில் கிராமப்புறப் பெண்களின் பங்களிப்பு எவ்வளவு முக்கியமானது? — காலநிலை மாற்றத்தினால் கிராமப் பகுதிகளில் விவசாய நிலம் பெண்களின் கைகளுக்கு வந்துள்ளது. அந்த வகையில் உணவு உற்பத்தி — ஊட்டச்சத்துப் பாதுகாப்புக்கும் பெண்கள் முக்கியப் பொறுப்பாகி உள்ளனர்.

எனினும், துரதிர்ஷ்டவசமாக, விவசாயத்தில் பெண்களின் பங்களிப்பானது இந்தியாவில் அங்கீகரிக்கப்படுவது இல்லை. விவசாயம் சார்ந்த மூலப்பொருள்களை வாங்க ஆண்களே சந்தைக்குச் செல்வதால், பெண்களுக்கு அது சார்ந்த நேரடி அனுபவம் குறைவாக உள்ளது.

இத்தகைய சூழலில், விவசாயம் சார்ந்த முழுமையான அறிவைப் பெண்களால் பெற முடிவதில்லை. இதுகுறித்த விழிப்புணர்வைப் பெண்களிடம் மத்திய — மாநில அரசுகள் ஏற்படுத்த வேண்டும். அடுத்ததாக, விவசாயத்தில் பெண்களின் பங்களிப்பை அங்கீகரிக்க, பெண்களுக்கு நிலப் பகிர்வில் முக்கியத்துவம் அளித்துக் கடன் வழங்குதலை இலகுவாக்க வேண்டும். விவசாயம் சார்ந்த தகவல்கள், தொழில்நுட்பம், இயந்திரங்கள் கிடைப்பதை எளிமையாக்க வேண்டும். இதனால் மாசடைந்த நீரையே அப்பெண்கள் பயன்படுத்துகிறார்கள். எரிபொருளுக்காகவும் நீண்ட நேரத்தைச் செலவிடுகிறார்கள். ஊட்டச்சத்துப் பாதுகாப்பில், குழந்தைகளுக்குச் சரியான நேரத்தில் உணவளிப்பது அவசியம். விவசாய நிலங்களில் வேலை செய்யும் தாய்மார்களால் குழந்தைகளுக்குச் சரியான நேரத்தில் உணவளிக்க முடிவதில்லை.

## கடல் முதல் வானம் வரை

1-ம் பக்க தொடர்ச்சி)

வருகின்றன. இதனால் சிறுகுறுநடுத்தரத் தொழில்துறை மற்றும் வான்வெளித்துறைக்கு புதிய சக்தி கிடைத்திருக்கிறது. வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்து வருகின்றன. இதோடு கூடவே, தற்சார்பு பாரதம் என்ற உள உறுதிப்பாடும் உறுதிப்பட்டுக்கொண்டு வருகிறது.

இந்த மாதம் தான், டிஆர்டிஓ நிறுவனம், உள்நாட்டுத் தயாரிப்பான நீண்டதூர தரைத்தாக்குதல் க்ரூஸ் ஏவுகணையின் வெற்றிகரமான பரிசோதனையை நிறைவு செய்திருக்கிறது. இதனை டிஆர்டிஓவின் பரிசோதனைக்கூடங்களும், இந்திய தொழில்துறைக் கூட்டாளிகளும் இணைந்து உருவாக்கி இருக்கின்றார்கள். அதாவது, இன்று கடல் தொடங்கி, வானம் வரை பாரதம் அதிக அளவிலே பாதுகாப்பாகவும், தற்சார்பு உடையதாகவும் ஆகி வருகிறது.

ஜூன் மாதத்திலே நடந்த ஒரு நிகழ்ச்சியிலே, ஒட்டுமொத்த உலகின் முயற்சிகளும் பாரதத்தோடு இணைந்தது; இந்த நிகழ்ச்சி தான் சர்வதேச யோகா தினம். இந்த முறை உலகின் 2500க்கும் மேற்பட்ட இடங்களிலே யோகக்கலையோடு தொடர்புடைய பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்தன. நமது தேசத்திலே கோடிக்கணக்கான மக்கள், பல இடங்களில் யோகக்கலை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

இந்த மாதம் தான், அஹமதாபாதில் ஏற்பாடு செய்யப்பட்ட உலக யோகாசன சேம்பியன்ஷிப் கூட பெரிய அளவில் விவாதப்பொருளானது. இதிலே பாரதம் மொத்தமாக 114 பதக்கங்களை வென்றிருக்கிறது. இதிலே 102 தங்கப் பதக்கங்களும் அடங்கும். பாரதம் இந்தப் போட்டியின் பதக்கப்பட்டியலில் முதல் இடத்தில் இருந்தது. நான் வெற்றி பெற்ற அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் பலப்பல பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கார் பூலிங் தொடர்பாக, அதாவது ஒரு காரிலே, ஒரே இடம் செல்வோர் பலர் ஒன்றாகப் பயணிப்பது தொடர்பாகவும் பலர் தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். யாரெல்லாம் தனித்தனியாக ஒவ்வொரு நாளும் ஒரே திசையிலே செல்கிறார்களோ, அவர்கள் இப்போது ஒன்றாகப் பயணிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். மக்கள் முடிந்தவரை பேருந்து அல்லது மெட்ரோவினைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். இதனால் பெட்ரோல் மற்றும் டீசல் சேமிக்கப்படுகிறது.

இதைப் போலவே, தேசத்தின் பல்வேறு பாகங்களில் இயற்கை உரங்களின் பயன்பாடு அதிகரிப்பது தொடர்பான செய்திகளும் வந்தவண்ணம் இருக்கின்றன. உலக அளவிலான இந்தச் சங்கடத்தை பாரதநாட்டவர் நாமனைவரும் இணைந்து எதிர்கொண்டு வருகிறோம் என்பது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. மக்கள் பங்களிப்பின் இந்தச் சக்தி நமக்கு பலத்தை அளிக்கும், வெற்றியை உரித்தாக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

தங்கள் இல்லத் திருமண விழாவிலே இந்தக் குடும்பம் கிராமத்தின் கிட்டத்தட்ட 3,500 மக்களுக்கு விபத்துக்காப்பீட்டிற்கான ஏற்பாட்டினைச் செய்தது. ஒவ்வொரு நபருக்கும் ஒரு லட்சம் ரூபாய் வரையிலான ஆயுள் காப்பீட்டினை ஏற்படுத்திக் கொடுத்தது. இந்த முன்னெடுப்பின் பின்புலத்தில் இருந்த உணர்வு உள்ளத்தைத் தொடும் வகையில் இருந்தது. விபத்திற்குப் பிறகு குடும்பங்கள் பொருளாதாரச் சிரமங்களை மேற்கொள்ள வேண்டியிருப்பதை இந்தக் குடும்பத்தார் கவனித்தார்கள். இத்தகைய வேளையிலே ஒரு சின்னச்சிறிய உதவிகூட, பேராறுதலாக ஆகிறது.

மனதின் குரலில் நாம் இப்போது பேச இருக்கும் சிறியதொரு விஷயம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையானது, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனித சமூகத்திலே பீடமிட்டு அமர்ந்திருக்கிறது. அது தான் மூடநம்பிக்கை. மூடநம்பிக்கை என்பது பல வேளைகளில் தவறான புரிதல் மட்டுமல்ல. அது பயத்தை ஏற்படுத்துகிறது, எப்போது பயம் மனதில் பீடிக்கிறதோ, மனிதன் வாய்மையைக் காண மறுக்கிறான். மூடநம்பிக்கையில் மூழ்கிய மனிதர்கள், பிறகு எந்த ஆதாரமோ, உண்மை அம்சமோ இல்லாமலேயே முடிவுகளை எடுக்கிறார்கள், இதனால் பெரும் தீமைகள் விளைகின்றன. ஆனால், அறிவியல், அனுபவம் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையிலே இந்த நம்பிக்கைகளுக்கு சவால் விடுக்கும் மனிதர்களும் அதே சமூகத்திலே இருக்கிறார்கள். மூடநம்பிக்கை தொடங்கி நம்பிக்கை வரையிலான இந்தப் பயணம் எளிதானது அல்ல, இன்று இப்படிப்பட்ட ஒரு வெற்றிப் பயணம் பற்றித் தான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்று இவர்கள் பல மந்திரங்களை மிகச் சிறப்பாக ஜபித்து வருகிறார்கள். இவற்றில் புருஷ சூக்தம், ஸ்ரீ சூக்தம், ஸ்ரீ ருத்ரம், துர்கா சூக்தம், தேவி மகாத்மியம் ஆகியன அடங்கும். பாரதத்திலிருந்து இத்தனை தொலைவில் இருந்தும்கூட, நமது பாரம்பரியங்களைக் கற்கும் அவர்களின் இந்த முயற்சி மிகவும் கருத்து,க்கமளிக்கவல்லது. பிரும்மகமல் டொமினிகானா குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும், அவர்களின் முயற்சிகளுக்கும் நான் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாரதநாட்டுக் கலாச்சாரத்தை உலகில் மிகவும் விரும்பப்படுவதாக ஆக்குவதில் தொடர்ந்து முயற்சிகளில் ஈடுபடும் அனைவரையும் நான் இதயப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

## 4 தலைமுறைக்கு நீடித்த நிலத் தகராறு: 59 ஆண்டுக்குப் பின்னர் முடிவு

புதுடெல்லி: கடந்த 4 தலைமுறைகளாக நீடித்து வந்த நிலத்தகராறு வழக்கு, 59 ஆண்டுகளுக்குப் பின்னர் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பால் முடிவுக்கு வந்துள்ளது. உத்தராகண்ட் மாநிலம் ஹரித்துவார் கிராமத்தில் 15.5 பிகா பரப்பு நிலம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது. 1957—ல் வாங்கப்பட்ட இந்த நிலம் தொடர்பான வழக்கு விசாரணை 4 தலைமுறையாக நடைபெற்று வந்தது. இந்நிலையில் அண்மையில் இந்த வழக்கு உச்ச நீதிமன்ற நீதிபதி பிரசாந்த்குமார் மிஸ்ரா, என்.வி.அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.இந்த நிலத்தை சராபத் அலி என்பவரின் முன்னோர்கள் 1957—ம் ஆண்டு ஜூன் 4—ம் தேதி விற்பனைப் பத்திரம் மூலம் வாங்கியுள்ளனர். ஆனால் சராபத் அலியின் உறவினர்களில் பலர் அதற்குச் சொந்தம் கொண்டாடி வழக்கு தொடுத்தனர். கடந்த 1957—ல் பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரத்தின் அடிப்படையில் இந்தத் தகராறு எழுந்தது. இதை எதிர்த்து சராபத் அலியின் முன்னோர்கள் சிலர் வழக்கில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிலையில், 1957—ல் கையெழுத்திடப்பட்ட விற்பனைப் பத்திரத்தை உறுதி செய்வதன் மூலம், 70 ஆண்டுகள் பழமையான நிலத் தகராறுக்கு உச்ச நீதிமன்றம் சமீபத்தில் தீர்வு கண்டது. ஒரு குடும்பத்தின் 4 தலைமுறையினர் 7 தசாப்தங்களுக்கும் மேலாக இந்தச் சட்டப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். நிலம் யாருக்குச் சொந்தம் என்பதில்தான் பிரச்சினையே இருந்தது. இந்நிலையில் 1957—ல் பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரம் செல்லும் என்றும், சராபத் அலி இந்தச் சொத்தை அனுபவிக்கலாம் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதன்மூலம் 70 ஆண்டுகளாக நடைபெற்று வந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையின் போது சாட்சியம் அளித்த பாரு என்பவர் தனது வாக்குமூலத்தில் தனது இருப்பிடத்தை நசிர்பூர் கலன் என்று குறிப்பிட்டு இருந்தார். ஆனால் விற்பனைப் பத்திரத்தின் சான்று செய்யப்பட்ட நகலில் அவர் தனது இருப்பிடத்தை நிஹந்பூர் சுதாரி என்று குறிப்பிட்டிருந்தார். இதனால் விற்பனைப் பத்திரச் செயல் முறை முறையாக நிரூபிக்கப்படவில்லை என்று கருதப்பட்டது. ஜூன் 4, 1957 தேதியிட்ட விற்பனைப் பத்திரத்தைச் செல்லாததாகக் கருதியதும், சாட்சி தொடர்பான முக்கியமற்ற முரண்பாடுகளின் அடிப்படையில் அதை நிராகரித்ததும் உயர் நீதிமன்றம் மற்றும் நில ஒருங்கிணைப்பு அதிகாரிகளின் வெளிப்படையான தவறு என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி வழக்கை நிறைவு செய்தது.



அடுத்த ஆண்டு இந்தியா வருகிறார் அதிபர் டொனால்டு ட்ரம்ப்: அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ரூபியோ தகவல்






# குஜராத்தில் பாரத் டாக்ஸி - அமித் ஷா தொடங்கி வைத்தார்

காந்திநகர்: நாட்டிலேயே முதல் முறையாக மத்திய கூட்டுறவு அமைச்சகத்தின் கீழ் டெல்லியில் பாரத் டாக்ஸி சேவை அறிமுகம் செய்யப்பட்டது.

சவாரி அழைப்பு செயலியான இது ஓலா, உபெர் போன்ற கார்ப்பரேட் நிறுவனங்களின் ஆதிக்கத்துக்கு சவால் விடும் வகையில் அறிமுகம் செய்யப்பட்டது. இந்நிலையில், குஜராத் மாநிலம் காந்திநகரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பாரத் டாக்ஸியை மத்திய உள் துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

இந்த புதிய மாற்று வழிமுறையானது, வாடிக்கையாளரோ அல்லது சேவை வழங்குநரோ (ஓட்டுநரோ) எந்தவொரு சுரண்டலையும் எதிர்கொள்ளாத ஒரு நியாயமான அமைப்பை உறுதி செய்யும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

MANAPPURAM FINANCE LTD.
CIN: L65910KL1992PLC006623.
Registered Office: W - 4/ 638A. Manappuram House,
P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

**தங்க நகைகள் பொது ஏலம்**

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கீழ்க்கண்ட கிளைகளில் 16.07.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

அந்தமான், பாபுலேன் பொர்ட்பிலேயர், 0129170700063858, 3915, 3947, 0129170730019147, 9146, பம்போஃப்லாட் அந்தமான், 0129280700031257, ஜன்கிலீகாட் பொர்ட்பிலேயர், 0131420700046581, 6611, 6639, 0131420730010714, 0719, 0767, ஒல்டு பாடுமான், 0131400700038599, 8612, 8630, 0131400730008077, பத்ரகடா ஜங்ஸன், 0131390700049718, 9735, 9769, 9802, 0131390730009889,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக













## விளையாட்டுச் செய்திகள்

# பனாமாவை வீழ்த்தி இங்கிலாந்தும், போர்ச்சுகலுடன் டிரா செய்து கொலம்பியாவும் முதலிடம்

ஃபிபா உலகக் கோப்பை பிரிவு எல்□ ஆட்டத்தில் பனாமாவை 2—0 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய இங்கிலாந்து, குழுவில் முதலிடத்தை கைப்பற்றி நாக்—அவுட் சுற்றுக்குள் நம்பிக்கையுடன் முன்னேறியது.

மெட்லைஃப் ஸ்டேடியத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இங்கிலாந்தின் நட்சத்திர வீரர் ஜூட் பெல்லிங்கம் அட்டகாசமான ஒரு கோலுடன் 2—வது கோலுக்கு உறுதுணையாக இருந்து அசிஸ்ட் செய்து ஆட்டநாயகனாக திகழ்ந்தார்.

அதேபோல் கே□பிரிவில் கொலம்பியா — போர்ச்சுகல் ஹெவிவெயிட் போட்டியில் கிறிஸ்டியானோ ரொனால்டோ இருந்தும் ஒன்றும் செய்ய முடியாமல் கொலம்பியா அணி கடுமையாக ஆடி, போர்ச்சுக்கல்லுடன் 0—0 என்று டிரா செய்தது.

முதல் பாதியில் பந்தை அதிகமாக கட்டுப்பாட்டில் வைத்திருந்தாலும், இறுதிக்கட்டத்தில் தாக்குதலை முடிக்க இங்கிலாந்து தடுமாறியது. மறுமுனையில் பனாமா எதிர்த்தாக்குதல்களின் மூலம் ஆபத்தான தருணங்களை உருவாக்கி இங்கிலாந்து பாதுகாப்புக்கு சவால் விட்டது. அதே நேரத்தில் மற்றொரு போட்டியில் குரேஷியா அணி கானாவுக்கு எதிராக முன்னிலையில் இருந்ததால், குழு முதலிடத்தைப் பெற இங்கிலாந்து வெற்றி பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இரண்டாம் பாதியில் ஆட்டத்தின் போக்கையே மாற்றியவர் பெல்லிங்கம். 62—வது நிமிடத்தில் புகாயோ சாக்கா எடுத்த கார்னர் வாய்ப்பை சிறப்பாக பயன்படுத்திய அவர், அருகிலிருந்து பந்தை வலையில் தள்ளி இங்கிலாந்துக்கு முன்னிலை பெற்றுத் தந்தார்.

அந்த முன்னிலை நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியதில்லை. ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு பெல்லிங்கம் அளித்த துல்லியமான கிராஸை கோல் அருகே எம்பி தலையால் முட்டி ஹாரிகேன் கோலாக மாற்றினார். இது ஹாரிகேனின் 11—வது உலகக் கோப்பை கோல் ஆகும். இதன் மூலம் இங்கிலாந்து அணிக்காக உலகக் கோப்பை வரலாற்றில் அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற சாதனையை படைத்து, நீண்டகாலமாக நிலைத்து இருந்த கேரி லினேகரின் சாதனையை முறியடித்தார்.

அதன்பிறகு ஆட்டத்தை முழுமையாக கட்டுப்பாட்டில் வைத்த இங்கிலாந்து, பனாமாவுக்கு மீளும் வாய்ப்பே வழங்காமல் வெற்றியை உறுதி செய்தது. இந்த வெற்றியுடன் இங்கிலாந்து அணி எல்□ குழுவில் முதலிடத்தைப் பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. நாக்—அவுட் சுற்றில் இங்கிலாந்து அணி காங்கோ அணியை எதிர்கொள்கிறது.

இங்கிலாந்தின் வெற்றியில் கேன் சாதனை படைத்திருந்தாலும், ஆட்டத்தின் உண்மையான கதாநாயகன் பெல்லிங்கம்தான். முக்கியமான தருணங்களில் தனது தரத்தை வெளிப்படுத்திய அவர், இங்கிலாந்தை குழு முதலிடத்துக்கு அழைத்துச் சென்றார்.

முதல் சுற்று முடிவில் எல்□ பிரிவின் இறுதி நிலவரம்:

,, கானா — 3 போட்டிகளில் ஒரு வெற்றி, ஒரு தோல்வி, ஒரு ட்ராவுடன் 4 புள்ளிகள்




*Printed & Published, Owned by* ***Anand Ganeshan*** *Printed & Published*
*from* KRG Publication Pvt. Ltd., Buniyadabad, Post Box No. 167, H.P.O., Port Blair - 744101
*Editor :* ***K.Ganeshan*** *Chief Editor :* ***T.Sivaraman, Ph: 221082***

**Public Grievance Cell, Delanipur. (Free Service)**
Advisor : K.Ganeshan 7.00 a.m. to 8.30 a.m. and 7.00 p.m. to 8.00 p.m.
Phone : 03192 - 230442 / 9434280981 E.Mail: **andamanexpressportblair@gmail.com**